# வேஷ்டியைக் (லுங்கியை ஒத்தது) காட்டிலும் பஞ்சகச்சம் மேன்மையாக இருப்பதன் சாஸ்திரம்

(Spiritual science underlying dhoti being more superior to a mundu (A lungi-like attire) - Tamil)

## முன்னுரை

‘தென்பாரத மக்களுக்கு ‘வேஷ்டி (லுங்கியை ஒத்தது)’ என்ற அவர்களின் பாரம்பரிய ஆடையின் மீது சிறப்பு அபிமானம் உள்ளது. உண்மையாகப் பார்த்தால் ரிஷி முனிவர்களின் காலத்திலிருந்தே பின்பற்றப்பட்ட ஹிந்துக்களின் ஆடையான ‘பஞ்சகச்சமே’ ஹிந்துக்-களின் புராதன பாரம்பரியம் மற்றும் அதுவே ஹிந்து கலாச்சாரத்தின் மிக முக்கிய அங்கமுமாகும். மேற்கத்திய வழக்கத்தை கண்மூடித்தன-மாக பின்பற்றுதல், தர்மபோதனை இல்லாதிருத்தல் ஆகிய காரணங்-களால் பஞ்சகச்சம் கட்டும் ஹிந்துக்களின் புராதன கலாச்சாரம் சிறிது சிறிதாக மறைந்து வேஷ்டி கட்டும் வழக்கம் ஹிந்துக்களிடையே வந்துள்ளது. இன்றைய ஃபாஷன் உலகத்தில் ‘பஞ்சகச்சம் கட்டுவது’ என்பது பிற்போக்கான எண்ணமாக கருதப்படுகிறது; காரணம் ‘பஞ்சகச்சம் என்பது வெறும் விவசாயிகளும் புரோஹிதர்களுமே கட்டும் வஸ்திரமாகும்’, என்பது மக்களின் தவறான கணிப்பாகி விட்டது. பெரும்பான்மையான ஹிந்துக்களுக்கு பஞ்சகச்சம் கட்டுவது கடினம் என்ற எண்ணம் உள்ளது, அதை கட்டும் பொறுமையும் அவர்களிடம் இல்லை. ஏதோ ஒரு அனுஷ்டானம் மற்றும் தார்மீக விதி செய்யும்போது அல்லது கோவிலுக்கு செல்லும்போது கூட பெரும்பான்மையான ஹிந்துக்கள் பஞ்சகச்சம் கட்ட தயார் நிலையில் இல்லை.

‘வேஷ்டி அணிவது’, ஸாத்வீகமில்லாத செயலாகும். வேஷ்டி கட்டும் மனிதரிடத்தில் அசுர சக்திகள் ஆகர்ஷிக்கப்படுகின்றன. அதனால் உடல், மனம் மற்றும் ஆன்மீகரீதியான கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளது. வேஷ்டி கட்டுவதற்கு தர்மசாஸ்திரத்தில் அனுமதி இல்லை. அதற்கு மாறாக ‘பஞ்சகச்சம்’ கட்டுவது ஸாத்வீகமான செயல் ஆனதால் அதைக் கட்டுவதன் மூலம் ஈச்வர சைதன்யம் க்ரஹிக்கப் படுகிறது, தர்மவழியும் பின்பற்றப்படுகிறது. இந்த நூலில் இவ்வனைத்து விஷயங்கள் பற்றிய ஆன்மீக சாஸ்திரம் விளக்கப்பட்டு உள்ளது. ‘இன்று ஸன்யாஸி மற்றும் சக்திவழி உபாஸகர்கள் கட்டும் ‘லுங்கி போன்ற காவி வேஷ்டி’யும் இன்றைய காலத்திற்கு ஏன் ஏற்றதல்ல’, என்பது பற்றிய ஆன்மீக சாஸ்திரமும் இந்நூலில் வழங்கப்பட்டுள்ளது.

இந்நூலின் தனித்துவ தன்மை என்னவென்றால், ‘பூமியில் இதுவரை கிடைக்கப் பெறாத ஆன்மீக சாஸ்திர ஞானம்’ இதில் உள்ளது. இன்றைய விஞ்ஞான யுக சந்ததியினருக்கு ஒவ்வொரு விஷயத்தையும்

விஞ்ஞான ஆராய்ச்சி மூலமாக அதாவது யந்திரங்களின் மூலமாக நிரூபணம் செய்தால் தான் அது உண்மை எனத் தோன்றுகிறது. அதனால் ‘வேஷ்டி ஸாத்வீகமில்லாதது மற்றும் பஞ்சகச்சம் ஸாத்வீகமானது’, என்பதை நிரூபணம் செய்யும் ‘மஹரிஷி ஆன்மீக பல்கலைகழக’த்தின் விஞ்ஞானபூர்வ முடிவுகளும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. இதுவும் இந்நூலின் ஒரு சிறப்பம்சம் ஆகும்.

‘இந்நூலைப் படித்து ‘பஞ்சகச்சம் கட்டுவது’ என்ற ஹிந்து கலாச்சாரத்தின் ஆடை அலங்காரம் சம்பந்தமான ஒரு மஹத்துவம் நிறைந்த ஆசாரம் பற்றி வாசகர்களின் அபிமானம் அதிகரிக்க வேண்டும் மற்றும் ஈச்வர சைதன்யத்தைப் பெற அவர்கள் பஞ்சகச்சம் கட்ட ஆரம்பிக்க வேண்டும்’, என்பதே ஸ்ரீ குருசரணங்களில் செய்யப்படும் பிரார்த்தனை!’ – **தொகுத்தவர்**

## ‘யாருடைய தார்மீக உணர்வையும் புண்படுத்த வேண்டும்’, என்பது இந்நூலின் நோக்கமல்ல!

தென் பாரதத்தில் ‘வேஷ்டி (லுங்கி போன்ற வஸ்திரம்)’ என்ற பாரம்பரிய ஆடை மீது மிகுந்த அபிமானம் உள்ளது. பல தார்மீக நிகழ்ச்சிகளிலும் மற்ற நேரங்களிலும் வேஷ்டியை அணிகின்றனர். அவர்களின் கண்ணோட்டத்தில் வேஷ்டி என்பது ஒரு தார்மீக அடையாள மாகும். ஆனால் உண்மையாகப் பார்த்தால் வேஷ்டி என்ற ஆடை ஸாத்வீகமில்லாதது, தர்மப்படியானது இல்லை. அதற்கு மாறாக ‘பஞ்சகச்சம்’ என்பது ரிஷி முனிவர்கள் காலத்திலிருந்தே ஹிந்துக்களின் ஸாத்வீக ஆடையாக இருந்து வந்துள்ளது; அது ஹிந்து தர்மப்படியானது. இப்பொழுது ஸன்யாஸிகள் மற்றும் சக்தி உபாஸகர்கள் அணியும் ‘லுங்கி போன்ற காவி வேஷ்டி’யும் இன்றைய காலப்படி தவறானதாகும். இந்நூலில் இவை எல்லாம் ஆன்மீக கண்ணோட்டப்படி தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் யாருடைய தார்மீக உணர்வையும் புண்படுத்த எழுதப்படவில்லை; மாறாக ‘எல்லோரும் ஆன்மீக சாஸ்திரத்தை தெரிந்து கொண்டு ஈச்வர சைதன்யத்தைப் பெறுவதற்கான ஆடைகளை அணிய வேண்டும் மற்றும் ஹிந்து தர்மாபிமானிகளாக வேண்டும்’, என்பதற்காக எழுதப்பட்டுள்ளது.

# அட்டவணை


| | | |
|---|---|---|
| 1. | வேஷ்டி (முண்டு, லுங்கியை ஒத்த ஆடை) | 11 |
| 2. | பஞ்சகச்சம் | 26 |
| 3. | இன்று ஸன்யாஸிகளும் சக்திவழி உபாஸகர்களும் கட்டும் காவி வேஷ்டி | 37 |
| 4. | பஞ்சகச்சம் மற்றும் இப்பொழுது ஸன்யாஸிகளும் சக்திவழி உபாஸகர்களும் உடுத்தும் லுங்கி போன்ற காவி வஸ்திரம் | 41 |
| 5. | பஞ்சகச்சம் மற்றும் வேஷ்டி | 55 |
| 6. | 'வேஷ்டி ஸாத்வீகமில்லாதது, பஞ்சகச்சம் ஸாத்வீகமானது' என்பதை தெளிவாக்குகின்ற 'மஹரிஷி ஆன்மீக பல்கலைகழக'த்தின் விஞ்ஞான ஆராய்ச்சி | 64 |
| 7. | மஹோன்னதமான ஹிந்து தர்மம், ஹிந்து கலாச்சாரம் மற்றும் ஹிந்து ராஷ்ட்ரத்தின் (ஈச்வர ராஜ்யம்) கொடி பட்டொளி வீசி பறக்கச் செய்திட அனைத்து ஹிந்துக்களுக்கும் அறைகூவல்! | 67 |
| 8. | ஏதோ காரணங்களால் பஞ்சகச்சம் கட்ட முடியவில்லை என்றால் முடிந்தவரை பைஜாமா அணியுங்கள்; 'பாண்ட்' –ஐ உபயோகிக்காதீர்கள்! | 68 |
| 9. | 'பஞ்சகச்சம்' அணிவதுடன் கூட ஸாதனை செய்வதும் மிகவும் அவசியம்! | 70 |



'தர்மசாஸ்திரம் ஏன் இவ்வாறு கூறுகிறது?' என்ற நூல் தொகுப்பின் கையேடு!

**நமஸ்காரத்தின் சரியான வழிமுறைகள்**



卐 'நமஸ்காரம்' என்ற வார்த்தையின் மூலமும் அர்த்தமும்

卐 தெய்வங்களுக்கும் மஹான்களுக்கும் நமஸ்காரம் செய்யும் முறை

卐 நமஸ்காரம் செய்யும் போது என்ன செய்ய வேண்டும், எதை தவிர்க்க வேண்டும்?